Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.204/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகையன் | Father Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | ஆவூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | லோடுமேன் |
| Religion | : | | Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராமதாஸ் எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 07.12.2023ம் தேதி காலை 09.30 மணியளவில் கோவிந்தகுடியில் டீ குடித்துவிட்டு ஆவூர் நோக்கி வருவதற்காக TNCSC எதிரே உள்ள மெகா சிட்டி பிளாட்டிற்கு அருகில் இடது பக்கமாக நடந்து வந்துகொண்டிருந்தார். ராமாதாஸின் பின்புறம் வந்த நாகூர் ஆண்டவர் பேருந்தின் இடது பக்கமுள்ள Cargo டோர் open ஆகி நடந்து வந்த ராமதாஸ் மீது பிடறியில் அடித்ததில் ராமதாஸ் கீழே விழுந்துவிட்டார். ஆஜர்

எதிரிதான் நாகூர் ஆண்டவர் பேருந்தை ஓட்டி வந்த நபர் ஆவார். அவர் பெயர் விஜய் எங்கள் ஊரை சேர்ந்தவர். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ராமதாஸை ஆவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று பார்த்தபோது மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று ராமதாஸை பார்த்தேன், அவர் அப்போது உயிருடன் இல்லை. எதிரியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வலங்கைமான் காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் விசாரணையில் மேற்சொன்னவாறுதான் கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

இறந்துபோன எனது சகோதரர் ராமதாஸ் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவரை நாங்கள்தான் பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். பொதுவாக விபத்துக்கு யார் காரணமோ அவர்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும்தான் என்னுடையது புகாரினை நான் எழுதவில்லை என்றால் சரிதான். என்னிடம் கையொப்பத்தினை பெற்றுக்கொண்டு பின்னர் போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் தனிநபர் சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக தவறாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்விபத்துக்கு எதிரி காரணம் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 19:59:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 204/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குணசேகரன் | Father Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | ஆவூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 07.12.2023ம் தேதி மதியம் 01.00 மணியளவில் கோல்டன் சிட்டி பிளாட் அருகே நான் இருந்தபோது அங்கு வந்த போலீசார் வாகன விபத்து சம்பந்தமாக விசாரித்து வரைபடம் தயார் செய்தார்கள். சாட்சியாக என்னிடமும் அண்ணாமலையிடமும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசரில் உள்ள

இரண்டாவது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் இறந்துபோன ராமதாஸின் தாய்மாமா என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்டதாக சொல்லும் காகிதத்தில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்தில்தான் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். இறந்துபோன ராமதாஸ் எனது உறவினர் என்பதால் போலீசார் சம்பவயிடம் வந்ததாகவும் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் கோல்டன் சிட்டி நகர் அருகே என்னை விசாரனை செய்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 20:00:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 204 /2025**

Preliminary Register

Deposition of **PW-3 LW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவிச்சந்திரன் | Father Name | : | கோவிந்தராஜ் |
| Village | : | ஆவூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | பூ வியாபாரம் |
| Religion | : | | Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது சகோதரர். இறந்த ராமதாஸ் எனது சகோதரர். கடந்த 07.12.2023ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் வெளியில் வியாபாரத்திற்கு சென்றிருந்தபோது அ.சா.1 எனக்கு போன் செய்து ராமதாஸ் மெகா சிட்டி பிளாட் அருகே விபத்து ஏற்பட்டதாக அவரை ஆவூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரிக்கு சேர்த்துள்ளதாக கேள்விப்பட்டேன் பிறகு ராமதாஸை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு பிணவறைக்கு சென்று

எனது சகோதரர் பிரேதத்தை பார்த்தேன். போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்டு என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 20:00:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 204/2025**

Preliminary Register

Deposition of **PW-4 LW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் | Father Name | : | கிருஷ்ணன் |
| Village | : | கரும்பழம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | தற்காலிக ஊழியர் |
| Religion | : | | Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து தற்காலிக ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1ன் சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன். அவர் எனக்கு மைத்துனர் ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன ராமதாஸ் எனது மைத்துனர் ஆவார். கடந்த 07.12.2023ம் தேதி காலை 09.30 மணியளவில் நான் வெளியில் வியாபாரத்திற்கு சென்றிருந்தபோது அ.சா.1 எனக்கு போன் செய்து ராமதாஸ் மெகா சிட்டி அருகில் உள்ள பெட்ரோல் பங்கில் விபத்து ஏற்பட்டதாக அவரை ஆவூர் அரசு மருத்துவமனையிலிருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு பிணவறைக்கு

சென்று எனது மைத்துனர் பிரேதத்தை பார்த்தேன். போலீசார் பிரேத விசாரணை மேற்கொண்டு என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 20:00:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 204/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-9**

| Name | : | நாகவள்ளி | Husband Name | : | பாலு |
|---|---|---|---|---|---|
| Village | : | அம்மாபேட்டை | Taluk | : | பாபநாசம் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடிதனம் செய்து வருகிறேன். அசா.1 மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன ராமதாஸ் எனது சகோதரர். கடந்த 2023ம் வருடம் தேதி மாதம் நியாபகமில்லை காலை 09.30 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது அ.சா.1 எனக்கு போன் செய்து ராமதாஸ் வாகன விபத்தில் அடிப்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். நான் சென்று பார்த்தபோது ராமதாஸ் இறந்திருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 20:00:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 204/2025**

Preliminary Register

Deposition of **PW- 6 LW -10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தமிழ்செல்வி | Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | திருக்கருக்காவூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | துப்புரவு பணியாளர் |
| Religion | : | | Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 26th day of March 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டடப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1 மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன ராமதாஸ் எனது சகோதரர். கடந்த 07.12.2023ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது அ.சா.1 எனக்கு போன் செய்து ராமதாஸ் வாகன விபத்தில் அடிப்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார். நான் சென்று பார்த்தபோது ராமதாஸ் இறந்திருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.26 20:00:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.